கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

அ.வ.எண். 18/2021

நாள் : 11.02.2026

வா.சா.1 – மாரியம்மாள்

**பிரதிவாதிகள் 2, 6 முதல் 10, 18 மற்றும் 19 தரப்பு குறுக்கு விசாரணை :–**

1. என் திருமணத்திற்கு முன்பாக நான் அரசாங்கத்திலோ, தனியார் நிறுவனத்திலோ பணிபுரியவில்லை என்றால் சரிதான். எனக்கு 1974ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. நான் வழக்கிற்காக எனக்கு 1974ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 1971ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்று சொல்வது தவறு. என் தாயார் மற்றும் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்துக்கள் அனைத்தும் என் திருமணத்திற்கு முன்பே கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். என் தம்பி தங்கராஜ் 19.06.1985 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். வழக்கிற்காக என் சகோதரர் தங்கராஜ் 10.06.1996 அன்று இறந்துவிட்டார் என வா.சா.ஆ.5யை மோசடியாக பெற்றுள்ளேன் என்று சொல்வது தவறு. தாவா சொத்துக்களை கிரையம் பெறும் பொழுது அதில் என்னுடைய பங்களிப்பு எதுவும் இல்லை என்று சொல்வது தவறு. கூட்டுக் குடும்பமாக நானும் மற்றவர்களும் உழைத்ததின் காரணமாக சொத்துக்கள் வாங்கப்பட்டதாக சாட்சி கூறுகிறார். தாவா சொத்துக்களைப் பொறுத்து என் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். பட்டா என் தம்பி பால்பாண்டி, கருப்பசாமி மற்றும் குருசாமி பெயரில் உள்ளது அவர்கள் பெயரில் பட்டாவை மாற்றிவிட்டார்கள் என்று சாட்சி கூறுகிறார்.

2. நாளது தேதி வரை என் தம்பிகளும் அவரது வாரிசுகளும் தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் அவ்வப்போது சென்று சொத்துக்களை பார்த்து வருவேன் என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்துக்களில் பெத்தம்மாள் கோவிலுக்கு பின்புறத்தில் தோட்டம் உள்ளது. அந்த தோட்டத்தை தவிர மற்ற சொத்துக்கள் தரிசு நிலமாக உள்ளன. தோட்டத்தில் என்ன பயிர் செய்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றும், பிரதிவாதிகள் 2, 6 முதல் 10, 18 மற்றும் 19 ஆகியோர்கள் அனுபவத்தில் தான் உள்ளது என்று சொல்வது சரிதான். அவர்களை சொத்தை மாற்றி விட்டு என்னை அனுப்பி விட்டார்கள் என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்துக்கள் முழுவதும் பிரதிவாதிகள் 2, 6

முதல் 10, 18 மற்றும் 19 ஆகியோரின் அனுபவத்தில் உள்ளதால் கூட்டு அனுபவத்தின் படி பிராது தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறு என்றும், நீதிமன்ற கட்டணத்தை முறையாக செலுத்தவில்லை என்று சொல்வது தவறு.

3. என் தாயார் லட்சுமியம்மாள் என் தம்பியான 2ம் பிரதிவாதி பால்பாண்டிக்கும், மற்றொரு சகோதரரான கருப்பசாமிக்கும் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தை கடந்த 29.05.1988 அன்று எழுதியுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. திருமணம் முடிந்த பின்பு நானும் என் தாயாரும் எத்தனை ஆண்டுகள் பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தோம் என்று சொன்னால் பேசிக்கொண்டு தான் இருந்தோம் என்று சாட்சி கூறுகிறார். மேற்சொன்ன உயில் சாசனத்தை என் தாயார் இறக்கும்வரை ரத்து செய்யாமல் இருந்ததால் அந்த உயில் செல்லத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. உயில் படி பால்பாண்டி மற்றும் கருப்பசாமி ஆகியோருக்கு தான் தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்று சொல்வது தவறு. என் தகப்பனார் மாரிச்சாமி அவர்கள் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து கடந்த 16.10.1989 அன்று என் சகோதரர்கள் பால்பாண்டி (2ம் பிரதிவாதி), கருப்பசாமி மற்றும் குருசாமி (1ம் பிரதிவாதி) ஆகியோர்கள் பெயரில் பதிவு செய்யப்படாத உயில் சாசனம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன உயில் சாசனத்தை என் தந்தை இறக்கும்வரை ரத்து செய்யாமல் இருந்ததால் அந்த உயில் செல்லத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. உயில் படி பால்பாண்டி, கருப்பசாமி மற்றும் குருசாமி ஆகியோருக்கு தான் தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்று சொல்வது தவறு. உயிலின் அடிப்படையில் தான் என் தம்பிகள் பெயரில் பட்டா பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொல்வது தவறு.

4. என் திருமணத்தின்போது எனக்கு 25 சவரன் தங்க நகைகளும் மற்றும் தாவா சொத்துக்களை பொறுத்து எனக்கு ஈவு தொகையாக ரூ. 1,15,000/-த்தை என் பெற்றோர்கள் அளித்தார்கள் என்று சொல்வது தவறு. என் திருமணத்தின் போது எனக்கு நகைகள் அளிக்கவில்லை. 4ம் பிரதிவாதி கமலதாசனுக்கு என் மகள் முருகேஸ்வரியை திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 3 முதல் 5 வரையானவர்கள் என் சகோதரர் தங்கராஜின் பிள்ளைகள் என்றால் சரிதான். எங்களுக்குள் நல்ல உறவு முறை தான் உள்ளது. வழக்கு தாக்கல் செய்யும் முன்பு 4ம் பிரதிவாதியான என் மருமகனிடம் வழக்கு தாக்கல் செய்யபோவதாக

கூறினேன். 4ம் பிரதிவாதியான என் மருமகன் தான் என் சார்பாக வழக்கறிஞரை பார்த்து ஆலோசனை வழங்குகிறார் என்றால் அவரும் பார்த்து ஆலோசனை வழங்கினார், நானும் வழக்கறிஞரிடம் ஆலோசனை வழங்கினேன் என்று சாட்சி கூறுகிறார். என் கட்சிப்படி தங்கராஜின் வாரிசு தாரர்களுக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். பிறகு ஏன் என் மருமகனான 4ம் பிரதிவாதியையும் அவருடைய தாயார் மற்றும் சகோதரியான 3 மற்றும் 5ம் பிரதிவாதிகளை வாதிகளாக சேர்க்காமல் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் அவர்களை பிரதிவாதிகளாக சேர்த்ததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. என் சகோதரர் தங்கராஜுக்கு தாவா சொத்துக்களை பொறுத்து 1975ம் ஆண்டு என் தகப்பனார் ஈவு தொகையாக (பங்கு தொகையாக) ரூ.3,00,000/- கொடுத்து தாவா சொத்துக்களில் அவருக்குண்டான உரிமையை நீக்கரவு செய்து விட்டார் என்று சொல்வது தவறு.

5. எனக்கு உரிமை இல்லாத சொத்தில் எப்படியாவது பங்கு பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் நானும் 3 முதல் 5 பிரதிவாதிகளும் இணைந்து வஞ்சகூட்டுடன் செயல்படுகிறேன் என்று சொல்வது தவறு. எனக்கும் என் சகோதரர் தங்கராஜுக்கும் ஏற்கனவே பங்கு தொகையை கொடுத்து விட்டதால் எங்கள் இருவருக்கும் தாவா சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்று சொல்வது தவறு. 2ம் பிரதிவாதியும் கருப்பசாமியின் வாரிசு தாரர்களான 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கும் தான் தாவா சொத்தில் முழு உரிமை உள்ளதால் 1வது இலக்க சொத்தை 11 முதல் 17 ம் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்று சொல்வது தவறு. 1வது இலக்க சொத்தை வீட்டு மனைகளாக ஆக்கியுள்ளார்கள் என்றால் வழக்கிற்கு பின்னர் அவ்வாறு செயல்பட்டுள்ளார்கள் என்று சாட்சி கூறுகிறார். 1வது இலக்க சொத்து பிரதிவாதிகள் 11 முதல் 17 ஆகியோர்களின் சுவாதீனத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்ற சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் உண்மையான விவரங்களை மறைத்து தாக்கல் செய்துள்ளதால் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதிகள் 3 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை –**

6. என் தகப்பனார் மாரிச்சாமி அவர்கள் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து கடந்த 16.10.1989 அன்று என் சகோதரர்கள் பால்பாண்டி (2ம் பிரதிவாதி), கருப்பசாமி மற்றும் குருசாமி (1ம் பிரதிவாதி) ஆகியோர்கள் பெயரில் பதிவு செய்யப்படாத உயில் சாசனம் எழுதிவைத்துள்ளதைப் பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணம் என்னை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VASANTHA KUMAR
Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.02.11 17:50:20 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.